## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை
## MCOP. No. 4 / 2023
### 2025 ம் வருடம் ஏப்ரல் மாதம் 15 ம் நாள் செவ்வாய்கிழமை

**ம.சா.1 – சத்யா**

**எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி**

விபத்து சமயத்தில் நான் லாடனேந்தலில் இருந்து திருப்புவனத்திற்கு ஆட்டோவில் சென்று கொண்டிருந்தேன். அந்த ஆட்டோ எங்கள் கிராமத்தை சேர்ந்த ஆட்டோ ஆகும். அந்த ஆட்டோவில் விபத்து சமயத்தில் 3 பேர் பயணம் செய்தோம். விபத்து சமயத்தில் அந்த ஆட்டோவில் சுமார் 10 பேர் பயணம் செய்தோம் என்றால் சரியல்ல. விபத்து வேலம்மாள் திருமண மண்டபம் எதிரில் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நாங்கள் அந்த திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்திற்காக சென்று கொண்டிருந்தோம். விபத்து சமயத்தில் நாங்கள் ஆட்டோவில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம். விபத்து சமயத்தில் எங்கள் ஆட்டோவில் மோதிய பேருந்து எதிரே வந்து மோதியது. இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். நான் மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னை போலீசார் விசாரித்த போது நான் சுயநினைவுடன் தான் இருந்தேன். நான் போலீசாரிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் பேருந்து எங்கள் ஆட்டோவின் பின்னால் இருந்து வந்து மோதியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அரசு பேருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது. விபத்து சமயத்தில் நாங்கள் பயணம் செய்த ஆட்டோ கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்ற போது வலதுபுறமாக மண்டபத்திற்கு செல்வதற்காக இன்டிகேட்டர் போட்டு

ஓட்டுநர் கையால் சைகை காட்டி வலது புறம் திரும்பிய போது விபத்து ஏற்பட்டது. ஆட்டோ ஓட்டுநர் எந்தவித சிக்னலும் காட்டாமல் வலது புறமாக திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் சம்மந்தப்பட்ட ஆட்டோவில் காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் விபத்து சமயத்தில் விவசாய வேலை செய்து வந்தார். தற்போது எனது கணவர் இறந்துவிட்டார். நானும் விவசாய வேலை தான் பார்த்து வந்தேன். பொதுவாக எங்கள் ஊரில் விவசாய கூலி வேலைக்கு சென்றால் ஒரு நாளைக்கு ரூ.200/- சம்பளம் கொடுப்பார்கள். நான் எனது மனுவில் ரூ.750/- சம்பாதிப்பதாக தகவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு தலை மற்றும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. விபத்தில் எனக்கு இரத்தக்காயம் ஏற்படவில்லை. நான் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் ஒரு நாள் மட்டும் சிகிச்சையில் இருந்தேன். இந்த விபத்து நான் பயணம் செய்த ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டநர் மீது எந்தவித தவறும் இல்லை. அரசுப்பேருந்து ஓட்டுநர் விபத்து சமயத்தில் போக்குவரத்து விதிகளை கடைபிடித்து மிகவும் கவனமாகவும் மெதுவாகவும் பேருந்தை ஓட்டிச்சென்றார் என்றும் ஆட்டோ ஓட்டுநர் தான் கவனக்குறைவாக சென்று பேருந்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயம் முழுவதுமாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்தினால்

**எனக்கு எந்த வித வருமான இழப்பும் நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை